ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிட நாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 29—9—46 | இதழ் 22

# "இன்பத்திராவிடமே என் இலட்சியம்"

—:(o):—

"கோர்ட்டாரவர்கள் தாங்கள் திருப்தியடையும் வண்ணம் எவ்வளவு அதிக, தண்டனையைக்கொடுக்க முடியுமோ அவைகளையும் பழிவாங்கும் உணர்ச்சி திருப்தி அடையும்வரைக்கும் எவ்வளவு தாழ்ந்தவகுப்புகொடுக்க உண்டோ அதையும் கொடுத்து இவ்வழக்கு விசாரணை நாடகத்தை முடித்துவிடும்படி வணக்கமாகக்கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவு நியாயமான லட்சியத்தை அடைய வேண்டுமானாலும் அதற்காகக்கஷ்ட நஷ்டங்களடைதல் என்னும் விலைகொடுக்க வேண்டுமாதலால் அவ்வாறுவேண்டிக்கொள்கிறேன."

காளையல்ல, பேசினது, கிழவர்! எனவேதான், காளைகள் ஆயிரமாயிரம், அவருடைய குரல்கேட்டுக் குதூகலிக்கின்றன.

ஒருமாலை—மூன்றரைமணி இருக்கும்—முகத்தில் "ஈ ஆடாது" உட்கார்ந்திருக்கிறார் மாஜிஸ்ட்ரேட். பசி தெரியாமல், பார்த்தகண்களை நீக்கமுடியாமல் தமிழர்கள், குடும்பங் குடும்பமாகஉள்ளனர் கோர்ட்டுக்கு, உள்ளேயும் வெளியேயும். சட்டம், ஒருபுறம்—சமர்மற்றோர புறம்—ஆச்சாரியார் ஓர்புறம்—பெரியார் இராமசாமி ஓர்புறம்—கட்டாயஇந்தி முறைத்துப்பார்க்கிறது, கன்னித் தமிழ் எழிலுடன் எதிர்நோக்குச் செலுத்துகிறது. தண்டனை தரும் அதிகாரம் அவர்கட்கு, தமிழைக்காக்கும் உரிமையைத்தாங்கிக்கொண்டிருக்கிறார் பெரியார். நடப்பது காங்கிரசாட்சி, சம்பவமோ, சிறைக்கு, மக்கட்தலைவனை அனுப்புவதாக இருந்தது. பெரியார் பேசினர், விடுதலை வீரர்களின் மொழியிலே, விலை கொடுப்பேன், உரிமைக்காக என்றார். எடு சட்டத்தை, கொடு தண்டனை, முடி இந்த நாடகத்தை என்று முழக்கமிட்டார். வயது என்ன? அறுபதாம் கலியாணப்பருவம்! பேச்சிலேயோ, தீ! போக்கோ, முறுக்கேறின படைத்தலைவருடையது! ஏன்? தமிழகம், அவர் பக்கம் நின்றது.

மாஜிஸ்ட்ரேட் என்ன சொல்லப்போகிறார்? எமது தலைவரின் நிலை என்ன ஆகும்? கூண்டிலே சிங்கம்! கும்பலாகத்தமிழர்நின்று பார்க்கின்றனர்! அரியணைமீதோ ஆச்சாரியார், என்று வருந்தினர் மக்கள். வாய்திறந்தார் மாஜிஸ்ட்ரேட்.

"2 வருஷம்" என்றார்!

இரண்டாண்டுகளா? எமது தலைவருக்கா? இந்தி வேண்டாம் என்பதற்கா! இரும்பிலே இருதயம் செய்து அமைத்துக்கொண்டனரோ ஆட்சியாளர்கள். கரும்பினும் இனிக்குமெமது தமிழைக் காத்திடக்கிளம்பினதற்கா, இத்துணைக்கடுந்தண்டனை—என்று எண்ணித்திகைத்தனர் தமிழர். திகைப்புண்ட தமிழரின் செவியில், மாஜிஸ்ட்ரேட் மேலும் சில சொல் கூறியது வீழ்ந்தது.

"2 வருஷம் தண்டனை. அத்துடன். அபராதம் 2000 ரூபாய்—கட்டத் தவறினால், மேற்கொண்டு ஒருவருஷம்".

1938ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 6-ந்தேதி மாலை 3—25க்கு தலைவர் பெரியாருக்கு 3 வருடத்தண்டனை விதிக்கப்பட்டது—வெடிகுண்டு வீசியதற்கு அல்ல, தமிழ்வேண்டும் தமிழர்க்கு — இந்தியைக்கட்டாயபாடமாக்கக்கூடாது என்று சொன்னதற்கு.

திகைத்ததமிழரை, ஒருமுறை நோக்கினர், 'திக்விஜயம்' செய்யும் மாவீரன் முறையில். கண்ணீர் திவலைகளைக்கண்டார். சால்வையை இழுத்துப்போட்டுக்கொண்டார், ஒருபுன்சிரிப்புடன்பேசினர், பக்கம் சென்றவரிடம், "நான் இப்போது ஓர்கைதி!" என்று.

ஆம்! தமிழர் தலைவரைக் கைதிக்கோலத்திலே கண்டனர் அன்று. அவருக்கு அது எட்டாவது முறை. தமிழர், அந்தக் 'கைதிக்'காகக் கண்ணீர் விட்டனர். குழந்தைகள்முதியவர்போலாயினர், முதியவர் குழந்தைகளெனக் கோவெனக்கதறினர்.

7ம் பக்கம் பார்க்க



## வெற்றிவிழா

8-ம்பக்கத் தொடர்ச்சி

தாகிவிட்டது — என்று உறுதியுடன் கூறலாம்-மகிழ்ச்சியுடன் சொல்லலாம். பெரியாருக்கு உளம் கனிந்தநன்றியைத் தெரிவிக்கலாம், தெரிவிப்பதுடன், "பெரியாரே! தாங்கள் அரும் பெரும் உழைப்பினால் உண்டாக்கிவைத்த சூழ்நிலையைநாங்கள் இனிப் பயன் படுத்துவோம் தங்களுக்கு மேலும் மேலும் தொல்லைநிறைந்த வேலைதரமாட்டோம். இந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தத் தங்கள் ஒருவரால்தான் முடியும். உண்டாக்கினீர்கள். [illegible] யர்; [illegible] சூழ்நிலை கெடாதபடி [illegible] துடன், [illegible] வேலைகள், [illegible] கள், ஆகிய வற்[illegible] [illegible] ணம் செய்து முடிப்போம்" என்று உறுதிகூறி, அவருக்கு மனமகிழ்வு, ஏற்படுத்திக்காட்டிவிட்டது! இனி வேலை நடக்கும்! அதற்கான ஆற்றல்மக்கள் உள்ளனர்" என்ற மகிழ்ச்சியுடன் கலந்த நம்பிக்கை பிறக்குமாறு செய்வதுதான் பெரியார் வாழ்விழாவின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டுமே,தவிர "விருந்து" குறிப்பிட்டது போலவோ, தோழர் அர்ஜுனன் அவர்களின் அறிக்கையைப் போலவோ, "நிதி" அல்ல முக்கியமானது. இன்னமும் நமது செவியில்ஒலித்தபடி இருக்கிறது திருச்சியில் திரண்டு வந்த 40-ஆயிரம் மக்களும் சந்தோஷத்தால் நர்த்தனமாடும் விதமாகப் பெரியார், "அப்படியும் இப்படியுமாக, வீடு வாங்கியும் அதனையே இலாபத்துக்கு விற்றும், செட்டாகச் செலவு செய்தும், இப்படி எல்லாம், கொஞ்சம் பணம், ஒருபத்து நாற்பது ஆயிரம் ரூபாய் சேர்த்துத்தான் வைத்திருக்கிறேன். யாருக்கு? கட்சிக்குத்தானே!" என்று கூறினது, அதுகேட்டு மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்ததும். ஆகவே, கட்சிக்கு நிதிதிரட்டித் தான் ஆகவேண்டும், பெரியார் விழாவின் முக்கியவேலை அது தான் என்று நிதியை முன்னணியில் நாம் நிறுத்தவில்லை—நாம் கூறுவது—நம் வெற்றி பெற்றிருக்கிறோம்—இனி உழைக்க [illegible] தோழர்களே—விசாரப்பட வேண்டியதில்லை—என்பதை விளக்க வேண்டும் என்பதுதான்.

அதுமட்டுமல்ல, நாம் பெரியாரின் இருபத் தொண்டின்பலனைப்பெற்று, சூழ்நிலையை மாற்றி [illegible]. இனி சூழ்நிலையை மாற்றும் வேலைமட்டுமல்ல நமக்கு. வேறோர் 'கட்டம்' ஆரம்பமாகிறது நமது இயக்கத்துக்கு என்பதை அறியவேண்டும்.

சுரங்கத்திலிருந்து,சிரமப்பட்டு, தங்கத்தைத் தோண்டி எடுத்தாகிவிட்டது. பெரியாரின்பெருவெற்றி அது. எடுத்துப் பார்க்கும்போது, "பாறை" போலத்தான் தோன்றும். அடுத்த கட்டம், வெட்டி எடுக்கப்பட்ட பாறை உருவில் உள்ளதை,'ரசாயன' 'விஞ்ஞான' முறைப்படி, உடைத்து, பிரித்து, துடைத்துத் "தங்கம்" என்று சகலரும் தெரியும்படிச் செய்வதுடன், அதனால் பயனுள்ளபணிகள் செய்து காட்ட வேண்டும். சுரங்கத்திலிருந்து பொன்னை வெட்டி எடுத்து வரும்காரியம், ஆபத்தானது, சிரமமானது, அதற்கு அலாதியானதிறம் முறைவேண்டும், கருவிகளும் அதற்குத்தனி, பெரியாரிடம் இவைகளுக்கான திறம் ஏராளம்—எனவே, அவரால் முடிந்தது — நமது நன்றி அதற்காக.

ஆனால் வெட்டி எடுத்துக் கொண்டு வந்த "தங்கத்தை" பதம் செய்ய, பக்குவம் செய்ய, முறை கருவிவேறு — செய்ய வேண்டிய பொறுப்பையும் பெரியாரிடமே தருவது நமது தன்மையைக் காட்டிக் கொள்வதாகும்—மீண்டும் மீண்டும், மேலும் மேலும் சுரங்கம் தோண்டும் வேலையையே செய்யும்படி பெரியாரைத் தூண்டிக் கொண்டிருப்பதும், நன்றி கெட்ட செயலாகும்.

எனவே 'விஞ்ஞானரசாயன' முறைப்படி,பாறைஉருவிலுள்ள பொன்னைப் பதமாக்கும் பணியை மற்றவர்கள் மேற்கொள்ளவேண்டும்.மேற்கொள்ளும்போது, சுரங்கவேலைக்காகப் பெரியார் கையாண்ட அதே முறைகளும், கருவிகளும் இருக்க வேண்டுமென்று எண்ணுவது, கிடைத்த பொற்கட்டியைக் கெடுக்கும் விதமாக முடியும். முறையும் கருவியும், வேறுதான் இதற்கு. இதனை உணர்ந்து, புதுப்பணியினை மேற்கொள்வோம், நீர் கவலையற்று, களிப்புடன், நம்பிக்கையுடன், எங்கள் வேலையைக் கவனித்துக் கொண்டு, தட்டிக்கொடுத்துக் கொண்டு, பெருமையுடன் எங்களைப் பார்த்துக்கொண்டுஇருங்கள் என்று இந்த விழாவன்று நாம், பெரியாருக்குக்கூறவேண்டும். அதுவே அவருக்கு நாம் காட்டவேண்டிய மரியாதை முறையாகுமேயொழிய,மேலும் மேலும் போராட்டம் வருகிறது—பெரியார் நம்மை நடத்திச் செல்லுவார்—என்று இன்றும் கூறி, அவருக்கு இந்தவயதிலும், சுரங்க வேலையும், சூறாவளியில் உழலும் வேலையும் தந்து,மேலும் அவருடைய பொன்முப்பை உறிஞ்சும் காரியத்தில் இறங்குவதாக இருக்கக் கூடாது.

ஒருபெரிய இயக்கம், பலபத்திரிகைகளின் துணையுடன், கட்டுக்கோப்புள்ள விதமாக உள்ள அமைப்பின் பக்கபலத்துடன், சாதிக்கக் கூடியதைவிட, மேலான, மகத்தான, வெற்றியை, சூழ்நிலையை மாற்றி அமைக்கும், அடிப்படைக் காரியத்தைப் பெரியார் ராமசாமி தமது 30-ஆண்டுதொண்டினால், பெற்றார்—நமக்கு அளித்தார்—அதனால் நாம்பயன்பெற்றோம்— நமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம், பணிவும் அன்பும் கலந்து.

## இன்பத்திராவிடம்

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

நீங்கள் உறுதியுடனும் துணிவுடனும் நம்பிக்கையுடனும் முன்வாருங்கள். ஒருபத்து வருடத்திற்குள் பெரியதொரு சமுதாயப் புரட்சி நடத்தி மானமும் விடுதலையும் பெற்று விடலாம்.

"நான் ஒரு எதிர் நீச்சுக்காரன். என்ன காரணத்தாலோ நம் நாட்டு மக்களின் பெரும்பான்மையான அபிப்பிராயத்துக்கு நான் மாறுபட்டவனாக இருந்துவருகிறேன். பழமையைப்பாராட்டுவது நமது மக்களுக்கு ஒரு பெருமையாய் காணப்படுகிறது, நானோ பழைமைப்பித்தைவெறுக்கிறவனாகயிருக்கிறேன். அதனாலேயே நான் வெகுபேர்களால் வெறுக்கப்படுகிறேன். ஆனாலும் அறிவாளிகள் சீக்கிரம் என்பக்கம் திரும்பிவிடுவார்கள் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை! அறிஞர் உலகு இன்று அவர் உரையை மறுப்பதில்லை! வீரர் உலகு அவர் செயலைப் பாராட்டவோ, துணை செய்யவோ தயங்கவில்லை. வாலிப உலகு சமஉரிமைப்போர்ப்படையை அமைக்கத்தவறவில்லை. விண்ணர் [illegible], அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டும்பல அறிகுறிகள் தோன்றிவிட்டன.

அவர் எதிர் நீச்சுக்காரர்தான்! ஆனால், அதிலே அவர் வெற்றி பெற்றுவிட்டார்.

"[illegible] புராதனகால ஏற்பாட்டைக் குறை கூறுகிறானே! வாய்ப்புழுக்காரனோ! [illegible]"

"காலிக்கட்டம், மண்டைவெட்டி! கவலையே வேண்டாம். எத்தனையோபேர், இதுபோல் முன்பெல்லாம் கத்தினர். கண்டது என்ன? அபஜெயம்! அதேதான் இவனுக்கும். என்னதான் அசகாயசூரனாக இருக்கட்டும், நமதுபழையகால ஏற்பாட்டோடு மோதிக்கொண்டால், அபஜெயம் நிச்சயமன்றோ!"

"ஏன் இந்த வீண்வேலை! இப்போது பழையகால ஏற்பாடுகள், என்ன உள்ளன. லோகம் மாறிண்டிருக்கு. ஆச்சார அனுஷ்டானங்கள் காலவேகத்தாலே அடியோடு மாறிவிட்டன. செத்த பாம்பை அடிக்கிறமாதிரி, எதற்காக இவர், ஜாதிகுலம் ஆச்சாரம் சாஸ்திரம்னு கண்டிச்சுக்கொண்டு இருக்கணும்? அனாவசியம்!"

"அவர் சொல்வது, உண்மை. நிச்சயமாகப் பேதம் ஒழிந்து போகத்தான் வேணும். எல்லாரும் சகோதரபாவத்தோடு வாழத்தான்வேண்டும். அதுதான் இலாக்கியம். ஆனா, அவசரப்படக் கூடாது. மெள்ள மெள்ள நடக்கவேண்டிய காரியம்"

"யார் இப்போது, பலஜாதி பல்குலம் இருக்கவேணும்னு வாதாடுவா! அதெல்லாம் ஒழியத்தான் வேணும். அதற்காகத்தான் சுயராஜ்யம் வரவேணும்னு சொல்கிறா பெரியவா. அதுக்காகத் தான் தற்சமயம் பாடுபடவேணும். சுயராஜ்யம் வந்தானதும்,ஜாதி பேதம் முதலிய சனியன்களைத் தொலைக்கிறகாரியந்தான் செய்தாக வேணும். நடக்காமலாபோகும். நிச்சயமாக நடக்கும்"

'சாபம், கோபம், கேலி, சமாதானம், சமரசம், என்று படிப்படியாகப்பழைமையின் காவலர், பேசிவந்த விதத்தைமேலே பொறித்திருக்கிறோம். இந்த மாறுதல், பெரியாரின் வெற்றி! அதற்கான 'விலை'யைக்கொடுத்து அந்தவெற்றியை அவர்பெற்றார்.

அவருடைய இலட்சிய பூமியில், இல்லாமை, போதாமை,அறியாமை, இருக்காது.

### திராவிடநாடு திராவிடருக்கே!

என்ற ஒருவாக்கியத்துக்குள் அடங்கி இருக்கும்.கருத்துகளை, அவருடைய மொழியின்மூலம், ஓரளவு விளக்கி உள்ளோம். அந்த இலட்சியபூமியை அடைய அவர், பட்ட, பட்டுவரும் பாடும், கொடுத்தவிலையும் சாமான்யமல்ல.

துன்புறும் எளியோர் துயரது தீர்ந்து
இன்புறும் வண்ணம் உண்மை இயம்ப
அஞ்சுவோன் வீரன் ஆகான்; மற்றும்
உற்ற துரைத்தலால் ஊறும்பழியும்
மற்றும் பல்லின்னல் வந்திடுமென்று
மெய்ம்மையைக் காக்கும் விரதம் விடுத்து
பொய்யுரைப் போரைப்புவிதனிலென்றும்
அடிமைபென்றே அறைந்திடுவோமே.

அஞ்சாநெஞ்சுடன் அறிவுக்காகப் போராடும் ஆற்றல்மிக்க பெரியார் வாழ்க! என்று, இன்று தமிழகம் வாழ்த்துகிறது.

---

ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100-ந. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.

திராவிட நாடு

காஞ்சி] 29—9—46 [ஞாயிறு

# இரட்டைக்குழல் துப்பாக்கி

★

அம்மணியம்மாளின் அறுந்ததாலி—பானுவின் ஒடிந்தவிரல்கள்— நம்பியாரின் இரத்தம்—

தியாகராஜன் — ராமச்சந்திரன்— தங்கவேலு —ராஜு — நால்வரின் பிணங்கள்.

ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறையில்.

பல இடங்களில் தடைஉத்திரவு. தடிஅடி. துப்பாக்கிப்பிரயோகம்.

இவைகளைக் கண்டோம் "பொதுஜனசர்க்கார்" நடக்கும் புனிதநாட்களில்.

இவ்வளவு காரியத்தையும் செய்தது, சரி, என்று பேசும் தலைவர்களைக் காண்கிறோம்.

இது அடக்குமுறை அல்ல, தொழிலாளர்களைக் கம்யூனிஸ்டுகளிடம் சிக்காதபடி தடுக்கும் முறை—தடுத்து ஆட்கொள்ளும் முறைஎன்று தேசியப்பத்திரிகைகள் எழுதியதைப் பார்த்தோம்.

இவ்வளவுக்கும் சிகரம்வைத்ததுபோல, இப்போது,எல்லாக் காங்கிரஸ் ஏடுகளும், வேலைநிறுத்தம் நின்றுவிட்டது—வாபஸ் வாங்கி விட்டனர் —என்று எழுதி, தொழிலாளர்கள் தோல்வி அடைந்தனர், கம்யூனிஸ்டுக் கட்சி கவிழ்ந்துவிட்டது, காரியம் பலிக்கவில்லை என்றும் தீட்டிவிட்டன.

மக்கள் மனதிலே, வேலைநிறுத்தம் தோற்றுவிட்டது, என்ற எண்ணம் பலமாகப்பதியவேண்டும் என்பதற்காகஅப்பத்திரிகைகள், கொயபிள்ஸ் கூச்சப்படும் விதத்திலே தப்புப் பிரச்சாரத்தைத் தாராளமாகச் செய்கின்றன.

நடந்தது என்ன? நிலைமை என்ன?

வேலைநிறுத்தம் நின்று விட்டது—நிறுத்தப்பட்டு விட்டது—இத்திங்கள் 23-ந்தேதி, தஞ்சாவூரில் கூடிய "ஸ்ட்ரைக்கமிட்டியார்," வேலைநிறுத்தத்தை நிறுத்திவிடும்படித் தீர்மானம்நிறைவேற்றினர் — வேலைக்குச்செல்கின்றனர் தொழிலாளர்கள்.

இதற்குத்தான், படுதோல்வி —புத்திவந்தது—தகர்ந்தது—என்று பலப்பல "மொழிகளை" வீசியுள்ளன காங்கிரஸ் ஏடுகள்.

படுதோல்வி அடைந்ததாகச் சொல்லப்படும், பாட்டாளிகளேகூடப் படித்தால்,உண்மையாகவே தோற்றுத்தான் போய்விட்டோமோ என்று சந்தேகம் கொள்வர். அவ்வளவு அபாரமான திறமையிலே, பிரச்சாரம் நடைபெறுகிறது.

"வந்தீர்களா! வாங்கய்ய, வாங்க." என்று அழைக்கிறார் வேலைநிறுத்தக்காரரை, வேலைநிறுத்தத்தில் சேராதவர், ஒரு கேலிப்புன்னகையுடன்.

தோல்வியடைந்த தொழிலாளிதுயரும் வெட்கமும் பின்தொடர, மவலைக்குவந்து சேருகிறான் என்பது, பிரச்சாரப் போதையால் மயங்கிய அந்த மகானுபாவரின் எண்ணம்

வேலைநிறுத்தம்என்ன ஆயிற்று தெரியுமோ! என்று, வாயில் குழையும் வெற்றிலைச் சாறுடன் சரசமாடியபடி கேட்கிறார் உணவு விடுதியில்உள்ளஉத்தமர். சூடானகாப்பியின் சுவைஅறியக்காதிருக்கும் அன்பர், "என்ன ஆகும்சாமிநம்மக்காங்கிரசிடம் போட்டி இட்டாநடக்குமா?" என்று அனுபல்லவி பாடுகிறார்.

தொழிலாளி தோற்றான் — வேலைநிறுத்தம் முறிந்தது—கம்யூனிஸ்டு கட்சிகவிழ்ந்தது — இதுவே புதிய பிரச்சாரம்—பலமான பிரச்சாரம்.

வேலைநிறுத்தம்நின்றுபோனது உண்மை — நிறுத்தப் பட்டது உண்மை—ஆனால், தொழிலாளர்கள் தோற்றனர் என்பது,உண்மையா? விஷயத்தைக்கவனித்துவிட்டு, முடிவுக்கு வரவேண்டும், பொதுமக்கள்.

வேலைநிறுத்தம் ஏன் ஏற்பட்டது? கூலிஉயர்வுக்கு அல்ல! லீவுவசதிக்குஅல்ல! குறிப்பிட்ட வேறோர் காரணத்துக்காக.

தொழிலாளர்களை, நீக்குவது என்பது, முதலாளியின் இஷ்டம் சில்லறை இடங்களில்.

"வேண்டாம்போ! நாளை முதல் வாசற்படி ஏறாதே!கணக்குத் தீர்த்தாகிவிட்டது" என்பான் முதலாளி.

"ஏன்? நான் என்னதவறு செய்தேன்?"என்று பணிவுடன் கேட்பான் பாட்டாளி.

"ஓ! இவருக்குக் காரணம் வேறு சொல்லவேண்டும்போலிருக்கு. போடா என்றால் போயேண்டா.........."என்பார் முதலாளி. விடுபட்ட இடத்தில், முதலாளியின் விதத்துக்கு ஏற்றபடி வார்த்தைகள், வசைவுகள் இருக்கும்.

தொழிலாளியின் வாழ்வு, முதலாளியின் நாக்கு நுனியில் இருந்துவந்தது. காரணம் கேட்கக் கூடாது. வேலைஇல்லை என்றால் இல்லை தான். ஐயாசொன்னால் சொன்னதுதான்!

இந்தமுறை, சங்கீதியாக இருக்கும் தொழில் ஸ்தாபனங்களில் இருப்பதென்றால், ஆயிரக்கணக்கான பாட்டாளி மக்களின் ஜீவாதாரஉரிமை பாழ்படும்,

## கிளர்ச்சி ஏன்?

தென் இந்திய ரயில்வேயில் நாற்பதாயிரத்துக்குமேல், தொழிலாளர்கள் உள்ளனர். அவர்கள், காரணம் காட்டாமலும், குற்றம்சாட்டப்பட்டால், விசாரணை நடத்தாமலும், தொழிலாளரை வேலையைவிட்டு நீக்கக்கூடாது; விசாரணை நடத்தியாக வேண்டும், என்று கேட்டனர்; முடியாது என்றது ரயில்வேநிர்வாகம்; விசாரணையின்றி வேலையைவிட்டுநீக்குவதும்,தண்டிப்பதும் மிகக்கொடுமையான முறை, அது தொழிலாளரின் உயிர்ப்பிரச்னையையேபாதிக்கும் ஆகவே, அந்த முறையைமாற்றுவிட்டால், நாங்கள் வேலை செய்யமாட்டோம் என்றனர் தொழிலாளர்கள். வேலைநிறுத்தம் நடந்தது ஒருமாதகாலமாக. இப்போது வேலைநிறுத்தம்நிறுத்தப்பட்டது, ஸ்ட்ரைக் கமிட்டியினரால்.

ரயில்வேமெம்பர், ஜனாப்அசப் அலி, குறையைத் தீர்த்துவைப்பதாக உறுதி கூறினதால்,வேலைநிறுத்தத்தை விட்டு விடுகிறோம் என்றுதான், தஞ்சாவூரில், ஸ்ட்ரைக் கமிட்டியார் கூறினர்.

"இதுஒரு வாதமா! கண்துடைக்கும் வித்தை! மீசையில் மண்படவில்லை என்று பேசும் முறை. அதெல்லாம் தோல்வி, தோல்விதான்" என்று வியாக்யான கர்த்தாக்கள் கூறிவிட்டனர்.

ஸ்ட்ரைக் கமிட்டி கூறுவதையும் விட்டு விடுவோம், காங்கிரஸ் ஏடுகள் எழுதியதையும் விடுவோம், கொஞ்சம், நாமாகச் சிந்திப்போம் என்று பொதுமக்கள் முயற்சிக்க வேண்டுகிறோம்.

எந்தக்குறை போகவேண்டுமென்று கிளர்ச்சி நடத்தப்படுகிறதோ, அந்தக் குறைபோக்கடிக்கப்பட்டால், கிளர்ச்சி வெற்றிபெற்றதுஎன்றுபொருள் இதற்கு வாதம், சிபார்சுதேவை இல்லை — தெளிவாகத் தெரியக் கூடியது. கிளர்ச்சி நின்றபிறகு கூட, குறை அப்படியேஇருக்குமானால், கிளர்ச்சிசெய்தவர்கள் தோற்றனர் என்றுபொருள்.

இது நிலைவிலிருக்கட்டும், பிறகு தீர்ப்பளிக்கட்டும்.

புதுடில்லிச்செய்திஇது.குறையைப்பரிகரிக்கும் அதிகாரம் பெற்றவர் வீற்றிருக்கும் இடத்திலிருந்து கிடைக்கும் செய்தி—நம்பியார் பிரஸ் சர்வீஸ்அல்ல—சுதேசமித்திரன் செய்தி—

"எந்த ரயில்வே தொழிலாளியையும் வேலையிலிருந்து நீக்குமுன் அந்தத்தொழிலாளி தனது வாதத்தை தகுந்த அத்தாட்சிகளுடன் தகுந்த அதிகாரியிடம் இலாகா விசாரணையின்போது எடுத்துக்கூறிய பிறகு அவ்வித நடவடிக்கை எடுத்துகொள்ள வேண்டுமென்ற முக்கியமான உரிமையை மத்திய ரயில்வே போர்டார் தொழிலாளருக்கு அளிக்க முடிவுசெய்கின்றனர்."

இப்போது சொல்லுங்கள் தோல்வியா, தொழிலாளருக்கு என்று.

காரணமின்றி வேலையினின்றும் நீக்கக்கூடாது — விசாரணை நடத்தியாகவேண்டும்— இதுவே, தென் இந்தியரயில்வே தொழிலாளர் கோரிக்கை. கிளர்ச்சிக்குக் காரணம் இதுவே; வேலைநிறுத்தமும் இதற்குத்தான்.

இனி, வேலையைவிட்டு நீக்குவதானால், விசாரணை நடத்துகிறோம் — விசாரணைவைக்காமல் வேலையிலிருந்துயாரையும் நீக்க மாட்டோம் என்று, ரயில்வேநிர்வாகம் தெரிவித்து விட்டது. கோரினது கிடைத்து விட்டது—கிளர்ச்சி பலித்துவிட்டது—தொழிலாளர்கள்வெற்றிபெற்றுவிட்டனர்—ஆனால் விலைகொடுத்தது அதிகம். நம்பியாரின் இரத்தம்—நால்வரின்பிணங்கள்—பானுவின் ஒடிந்தவிரல், அம்மணியம்மாள் தாலி, ஆயிரத்துக்குமேற்பட்டவர்கள் சிறையில், தடியடி துப்பாக்கிப் பிரயோகம் முதலியன.

இந்தவெற்றியைத்தான் தோல்விஎன்று தேசியப்பத்திரிகைகள் எழுதுகின்றன!

"வேலைநிறுத்தம் ஒழிந்து போச்சுசார்!"

"ஆமாம்சார்! விசாரணையில்லாமல் டிஸ்மிஸ் செய்கிற கொடுமை ஒழிந்தது,வேலைக்குத் திரும்பிவருகிறோம்"

இப்படித்தான் உரையாடல் இருக்க நேரிடும்; ஆனால் காலையில் கோழியுடன் எழுந்து இரவு கோட்டான் கூவும்வரை பாடுபட்டுழலும் பாட்டாளி, பட்டணத்திலே, கொலுவீற்றிருக்கும், "ஆசிரியர்களை" எப்படிச் சந்திக்கமுடியும்! ஆசிரியரைக்காண ஆபீஸ்பையன் அனுமதிப்பானே. அல்லது அவர், அகிலஉலகசமாதான மாநாடு பற்றிய அருமையான தலையங்கம் தீட்டிக்கொண்டிருக்கிறார், பார்க்க அவகாசம் இல்லைஎன்று கூறி விடுகிறானே, யார் கண்டார்கள்.அவர்கள்பெரியவர்கள்! மகத்தான பணியில் ஈடுபட்டவர்கள்! யார் உடையப்பாடுபடும் பாட்டாளியா?

வெற்றி, தோல்வி விஷயம் ஒருபுறம் இருக்கட்டும்; பொதுமக்கள் இந்த வேலைநிறுத்த காலத்திலே, தொழிலாளர்கள் அடைந்த வேதனையைக் கொஞ்சம், மனிதாபிமானத்தோடுசிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம். எவ்வளவு மனமறிந்த பொய்ப்பிரசாரத்தினாலும், பலமான அடக்குமுறையினாலும், தொழிலாளத் தோழர்கள் தாக்கப்பட்டனர், என்பதையும், இவ்வளவு பெரிய கொந்தளிப்பைஎவ்வளவு எளிதாகத் தேசியப்பத்திரிகைகள் தெரியவொட்டாதபடி தடுத்து விட்டன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

தொழிலாளர்களும், தங்கள் சக்தியை முறியடிக்க யாரார் கச்சையைவரிந்துகட்டிக்கொண்டுள்ளனர் என்பதையும் உணரவேண்டும். ஏனெனில், இப்போது, இந்நாட்டில்புதியதோர் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விழிப்புற்ற தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரிடையாக நிற்பது இடுப்பொடிந்த, ஏகாதிபத்யமல்ல; முறுக்கேறிய, மூலபலம் உள்ள, படைபலம் மிகுந்த "தேசியம்"—அன்புடன், சொந்தங்கொண்டாடி, பாட்டாளிகளே வளர்த்ததேசியம். தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் இது எதிர்பாராதபத்து. எங்கு ஆதரவுகிடைக்குமென்று அவர்கள் மனமாற நம்பினார்களோ, அதே இடத்திலிருந்து, எதிர்ப்பு தேடிஎடுத்த தேன் குடத்தில்

(அடுத்த பக்கம் பார்க்க)

## இரட்டைக்குழல்

3-ம் பக்கத் தொடர்ச்சி

நந்த தேள்கிளம்பிக் கொட்டுகிறது.தேசியம்,நாஜீசமாகமாறுகிறது.

முன்பெல்லாம், தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்தால், வேலைநிறுத்தம் ஏற்பட்டால் சட்டம் சமாதானம் ஒழுங்கு அமைதி என்றகாரணம் கூறிக்கொண்டு, அதிகார வர்க்கம் அமுல் நடத்தும். 144 செக்ஷன் பிறக்கும்,தடியடிதுப்பாக்கிப்பிரயோகம், சிறைமுதலியன நடைபெறும், தொழிலாளர்கள் இவ்வளவு தாக்குதல்களைச் சமாளித்தாகவேண்டும் — முடிந்தது—வெற்றிகரமாகவே முன்னேறிச் சென்றனர். அவர்கள் மீது சட்டம் சீறியபோது, அடக்குமுறை வீசப்பட்டபோது, அவர்களிடம் அன்பு காட்டவும், ஆதரவுதரவும்' அவர்களுக்காகப் பரிந்து பேசவும். பொதுமக்கள் முன்வந்தனர். எனவே அந்த பலத்தைத் துணைகொண்டு, அதிகாரவர்க்கத்தை எதிர்த்து நிற்கும் சக்தி தொழிலாளர்களுக்கு இருந்தது. பட்டினிக் கொடுஞ்சிறையில் இருக்கமுடியாது என்று பாணிபாடிக் கொண்டு எழுந்தனர்பாட்டாளி மக்கள் [illegible]களுடைய விடுதலைக்காக மக்கள் ஆதரவுதிரட்டித் தந்தனர்— அனுதாபப்பட்டனர்.

அந்நியர்களைத்தடுக்கக் கேடயம் இருந்தது! குண்டுபாய்ந்து செல்லமுடியாத கவசம் கிடைத்தது. போரிடுவதற்குத் தேவையான ஆர்வம் தருவதற்கு 'வீரரசம்' தரப்பட்டது.எனவே அவர்களால், தாக்குதல்களைச் சமாளிக்கமுடிந்தது.

இப்போது நிலைமை வேறு; மாறிவிட்டது,விபரீதமானமுறையில், வேதனையான விளைவுகள் ஏற்படும் முறையிலே.

இப்போது, தொழிலாளர்மீது 'இரட்டைக்குழல் துப்பாக்கி' பிரயோகிக்கப் படுகிறது.

### பிரச்சாரப்பீரங்கி

சர்தார் வல்லபாய்படேல், இடைக்கால சர்க்காரிலே, போலீஸ் பாதுகாப்பும், ரேடியோவும் சேர்த்து தமதுஇலாக்காக்கள் ஆக்கிக்கொண்டிருக்கிறார். அதாவது, அடக்கும்சக்தி, அறிவிக்கும் வசதி இரண்டும் அவரிடம். போலீசையும் ரேடியோ மூலம் பிரச்சாரத்தையும், ஏககாலத்தில் வேலைவாங்கும் வசதியை அவர் பெற்றிருக்கிறார்.

படேல்மட்டுமல்ல, காங்கிரஸ் ஆட்சிசெய்யும் இடங்களிலெல்லாம், இதே போலத்தான்— இரட்டைக்குழல்துப்பாக்கியாக இருக்கிறது —போலீஸ், பிரச்சாரம் இரண்டும் தயாராக உள்ளன.

முன்பு இருந்த ஆட்சியாளர்களிடம், இந்த இரட்டைக்குழல் துப்பாக்கிகிடையாது. போலீசைக்கொண்டு அடக்குவர் பாட்டாளிகளின் கிளர்ச்சியை,ஆனால் உடனே' பிரச்சாரப் பீரங்கிகள் முழங்கத் தொடங்கும் ஆட்சியாளரை நோக்கி.

பொன்மலையில் போலீஸ் அட்டூழியம்

காட்டு மிராண்டிப்பேர்க்கு
கண்மூடிதர்பார்
இரத்தவெள்ளம்! பிணவரிசை!

என்று, பிரச்சார வேட்டுகள், கிளம்பும்' வேகவேகமாக, புதுப் புது அளவில் முறையில், ஆட்சியாளர்கள் திகைக்குமளவு, நாடு அல்லோலகல்லோலமடையுமளவு நாள்ஒன்றுக்கு நாலு அறிக்கை வெளியிட்டாலும், சர்க்காரால் சமாளிக்க முடியாதபடியான வதந்திகள் பரவும், கடைவீதி, தெருத்திண்ணை, காப்பிக்கடை, கதர்க்கடை, கோயில்குளத்தங்கரை, அடுப்பறைபடுக்கையறை இசைமன்றம் கூத்துக் கொட்டகை, கட்டிடக்கரை மலைஉச்சி, எங்கும், போலீஸ் அடக்குமுறை—தொழிலாளர்படும் துயரம்—பற்றியே பேச்சு, கண்டனம் இருக்கும்—வளரும்—ஓங்கி வளர்ந்தபடி இருக்கும்.

"இன்று நமக்குக்கிடைத்திருக்கும் தகவல், பூரணமானது அல்ல வென்றாலும், நம்பிக்கையான இடத்திலிருந்து கிடைத்திருக்கிறது. அதனைக் காணும்போது எவரும் இரத்தக்கண்ணீர் சொரிவர். ஏழைத் தொழிலாளர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 70-பேருக்கு மேல் மாண்டுபோனதாக அறிகிறோம். 7-வயதுச்சிறுமியும் 70 வயதான மூதாட்டியும் பிணமாயினராம்"

என்று உருக்கமான செய்தி கொட்டை எழுத்தில் வெளிவரும். ஊர் கொதிக்கும், படிப்போர் உள்ளம் வெடிக்கும், இயற்கை. செய்தியைப் படிக்கும் பாட்டாளிஉலகு, உயிரைப் பணயம்வைத்தாகிலும்உரிமைப் போரை நடத்தியே தீரவேண்டுமென்று உறுதி கொள்ளும்.

மறுதினம், மூலையில் கடுகு எழுத்திலே முன்னாள் அறிக்கைக்கு மறுப்பு இருக்கும்— அதுவும், பிரச்சார முறைப் படியே பதிப்பாகி இருக்கும். "70 பேர் இறக்கவில்லை—7-பேர் தான்" என்று போலீஸ் இலாக்கா அறிக்கை அனுப்பிஇருக்கும்; பத்திரிகை அதை வெளியிட்டிருக்கும் — வெளியிடாமலிராது— ஆனால், எப்படி?

70-பேர் அல்லவாம்!
போலீஸ் இலாக்கா
மழுப்பல்
படுகொலைக்குப்பசப்புப்பேச்சு

என்று தலைப்புகள் இருக்கும்! அதாவது அதனைப்படிக்கும் போலீஸ் அதிகாரியே, "ஏன் இந்த அறிக்கையை அனுப்பினோம். இந்த பாழாய்ப்போன பத்திரிகைக்காரன், இதைவைத்துக்கொண்டுவேறு, கதை அளக்கிறானே" என்று ஆயாசப்படுவார்—அதுபோலக் கிளம்பும்பிரச்சாரக்குண்டு வீச்சினால், போலீஸ், சட்டம், என்பவைகள் பயப்படவேண்டிய நிலை பிறக்கும். தொழிலாளர்களுக்கு வெற்றிவரும்.விழாநாளில், பிரச்சாரப் பீரங்கிப்படையினருக்கு வாழ்த்துதல், வணக்கம் தெரிவிக்கப்படும்.

இந்தப்பிரசாரம், கேடயமாக கவசமாக இருந்துவந்ததுதொழிலாளர்களுக்கு; அதேசமயத்தில் இந்தப்பிரசாரம், பலமானபீரங்கியாக இருந்தது, அதிகாரவர்க்கத்தைத் தாக்க.

இந்த நிலைமை இருந்தபோது, அதிகாரவர்க்கத்திடம் ஒரேஆயுதம் இருந்தது. போலீஸ்.

தொழிலாளர்களின்சார்பிலே பிரச்சாரப் பீரங்கிப்படைசகிதம் நின்றனர் காங்கிரசார்,

பிரச்சாரம் வென்றது; போலீசால் முடியவில்லை.

பிரச்சாரத்தின் பலனாகப் போலீசுக்கும் பொதுமக்களுக்கும் இடையே கசப்பும் வளர்ந்தது.

இந்தவசதி இன்று தொழிலாளருக்கு இல்லை. இதனை அவர்கள்உணர்ந்தாக வேண்டும்.

### புதியபலம்

உண்மை, அதுமட்டுமல்ல, பயங்கரமான உருவில் இருக்கிறது உண்மை. இப்போது இரண்டு வகையான ஆயுதங்களும், போலீஸ், பிரச்சாரம். இரண்டும் ஒரேகரத்தில் உள்ளன. ஆம்! இரட்டைக்குழல் துப்பாக்கி நீட்டப்படுகிறது தொழிலாளர் இயக்கத்தின் இருதயத்தின்மீது. இன்று,காங்கிரசே ஆட்சிசெய்கிறது.எனவே போலீசை வைத்துக்கொண்டிருக்கிறது; பிரச்சாரமும்காங்கிரசிடமே இருக்கிறது! எனவே, கேடயம்,கவசம்,பறிக்கப்பட்ட நிலையில் தொழிலாளர் இயக்கம், இரட்டைக்குழல் துப்பாக்கியை நீட்டிக்கொண்டிருக்கும் காங்கிரசிடம் சிக்கிக்கொண்டிருக்கிறது. சிரமமான நிலைமை! ஆபத்தானதுங்கூட!

அட்வைசர்களோ, வேறு ஆட்சியாளர்களோ, பாட்டாளிகளை அடக்க அடக்குமுறையை உபயோகித்தனர் என்றாலும், அவர்கள் எங்கே, தங்களை அம்பலத்துக்கு இழுத்து வைத்து, மக்களின் ஆத்திரத்தைக்கிளப்பி விட்டு, நாட்டிலே ஆபத்து மூண்டுவிடும்படிச் செய்துவிட, பிரச்சாரப்பீரங்கி சகிதம் காங்கிரசார்கிளம்பிவிடுகின்றனரோ, என்று பயப்பட வேண்டிய நிலைமை. இருந்தது.

இன்று அந்த அச்சம் ஆள்பவர்களுக்கு இல்லை—ஏன்? ஆள்வது காங்கிரஸ் — அதனிடம் போலீசும் இருக்கிறது பத்திரிகையும் இருக்கிறது—இரட்டைக் குழல் துப்பாக்கி!

அந்தத்தைரியத்திலேதான், தொழிற் சங்கங்களை, குறிப்பாக சிகப்புக்கொடி பறக்கும் சங்கங்களைத் தரைமட்டமாக்க முடியும் என்று காங்கிரஸ்கருதுகிறது—முயற்சிக்கிறது—ஆரம்ப வெற்றிகூட அடைந்திருக்கிறது.

பிரச்சாரபலம் வேறொருவர் கையிலே இருக்கிறதே என்ற பயத்தால், முன்பு ஆட்சிசெய்தவர்கள், அடக்க ஒடுக்கமாக, சமாதானம் சொல்லும் முறையில் கூடப்பேசினர் — குழைவு, நெளிவு, மறைவு, இருந்தனபேச்சில், போக்கில்.

காங்கிரசுக்கு அந்தக் கவலை இல்லை. அதன்கரத்திலே, இருட்டடிப்பு உண்டாக்கும் சக்தி இருக்கிறது — மக்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பும் வசதி இருக்கிறது— தன் விருப்பத்தின்படி மக்கள் நினைக்கும் படிச்செய்யும் 'வல்லமை' இருக்கிறது—எனவே, பேச்சும்போக்கும், அழுத்தந்திருத்தமாக, நெறித்தபுருவத்தினரின் நெருப்புப்பொறிப்பேச்சாக 'இருக்கிறது — மறுப்பு கிடையாது— மறைவுகூடக் கிடையாது.

"நம்பியாருக்கு மண்டையில் அடியாமே"

"ஆமாம்!"

"ஏன்?"

"அடிவிழும்இடத்துக்கு அவர் போனதால்!"

"இது அக்ரமமல்லவா?"

"அமைதியை நிலைநாட்டச் சிரமப்பட்டு, நமது போலீஸ் படைஎடுத்துக்கொண்டதிறமையான,முறையான காரியம் அது"

"நம்பியார் என்ன குற்றம் செய்தார்?"

"எவ்வளவோ! என்னையே கண்டபடி திட்டினர்"

"யார் தெரிவித்தார்கள்?"

"நமது போலீஸ் இலாக்கா! என்மண்டையை உடைப்பதாகச்சொன்னாராம்"

"அதற்காக......................"

"அவர் போலீசார் அமைதியை நிலைநாட்டும் நேரத்தில் குறுக்கிட்டார். போலீசார் தங்கள் கடமையைச் செய்தனர். நீரே, சொன்னீரே, மண்டை உடைந்துவிட்டது என்று. ஏன் அந்த நம்பியார், அந்தஇடத்துக்குப்போகவேண்டும்"

கேள்வியும்பதிலும் இவ்விதம்! பிரச்சாரப்படையில்லாத ஆட்சி இருந்தபோது, இதுபோலப் பேசமுடியாது.

மாலையிலே, இதழ்களெல்லாம் என்ன எழுதின.

"பிரகாசம் சுடச் சுடப்பதில் கொடுத்தார்!"

"ஆணித்தரமான பதில்"

"வீரகர்ஜனை புரிந்தது ஆந்திர கேசரி"

"பொதுஉடமைக்காரர்களின் போக்குக்குக்கண்டனம்"

இவ்விதம் அர்ச்சனைகளே!

அட்வைசர்காலமாக இருந்தால், இப்படி கேள்வியும் பதிலும், பத்திரிகை புகழ்மாலையும் இருக்குமா!

இரட்டைக்குழல் துப்பாக்கி இருக்கிறது என்பதைத் தோழர்கள், ரயில்வே வேலை நிறுத்தத்தின்போது உணர்ந்துகொண்டனர்.

இத்தகைய இரட்டைக்குழல் துப்பாக்கியின் துணைகொண்டு நடத்தப்படும் ஆட்சிக்குத்தான், நாஜீசம் என்று பெயர்! அதன் தாக்குதலைப், பாட்டாளி உலகு தாங்கவேண்டும்— நிச்சயமாகத் தாங்கமுடியும்என்றுமட்டுமல்ல இறுதியில் இரட்டைக்குழல்துப்

(5-ம் பக்கம் பார்க்க)

## இரட்டைக்குழல்

4-ம் பக்கத் தொடர்ச்சி

பாக்கியின் குண்டுகள்' தீர்ந்து போய், களத்திலே அதனைப் போட்டுவிட்டுஓடுமளவுக்கு,நாஜீ சத்தைப் பாட்டாளி வர்க்கம் முறியடிக்கத்தான் போகிறது என்பதிலே நமக்குத் துளியும் சந்தேகமில்லை.

### இருமுனைகள்

எம்மிடம் போலீசும் இருக்கிறது—அதுமட்டுமல்ல, பொது மக்களின் மனதைத்கயாரிக்கும் மந்திரக்கோலான, பிரச்சாரமும் இருக்கிறது, ஆகவே, 'கபர்தார்' என்று கூறுகின்றனர், நாடாள்பவர்கள்.

வேலை நிறுத்தத்தின்போது, எவ்வளவு 'திறமையாக' இந்த இரட்டைக் குழல் துப்பாக்கி வேலை செய்ததுஎன்பதை,ஆராய்பவர்கள், ஆச்சரியமடைவர்.

ஒன்பதுபேர் கைது

என்று ஒரு 'துண்டு' இருக்கும்—போலீஸ் இலாக்காவின் சுறு சுறுப்புக்கு எடுத்துக் காட்டு.

அதன் அடியிலே வேறோர் செய்தி வரும்.

500 பேர் வேலைக்குத்திரும்பினர்.

என்ன இதன் பொருள்?பல! ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான 'உபதேசம்' இதன் மூலம்.

தொழிலாளர்களே! பிடிவாதம்செய்தால் பிடிபடுவீர்கள், அந்த ஒன்பதுபேரைப்போல"—தண்டோபாயம்!

தொழிலாளர்களே!.500பேர் திரும்பி வேலைக்கு வந்துவிட்டனர், நீங்கள் ஏன்வீணாக வேலை நிறுத்தம் செய்கிறீர்கள். வந்துவிடுங்கள். முயற்சியில் பலனில்லை" பேதஉபதேசம்!

இப்படி இரட்டைக்குழல்துப்பாக்கி வேலை செய்கிறது.

வேலைநிறுத்தத்தை ஆதரித்துப் பேசுபவர்களுக்கு,வாய்ப்பூட்டு! வேலை நிறுத்தம் கூடாது என்று பேசுபவர்களுக்குப் பத்திரிகைகளிலே, தாராளமாக இடம்!

இவ்விதமாக, இருமுனைகளிலும்தாக்குதலைநடத்தமுடிந்தது.

இது தங்கள் ஒப்பற்ற பலத்தைக்காட்டுவதாகும்; இனி எவரும்தமக்குஈடுஎதிர் கிடையாது; தமது மகத்தானசக்திக்குமுன்பு எந்த இயக்கமும் மண்டியிட்டே ஆகவேண்டும் என்ற எண்ணம் திண்ணமாகவரும்காங்கிரசுக்கு. ஆனால் உண்மை முற்றிலும் வேறாக இருக்கும்.

எதனை, பலம் என்று கருதுகிறார்களோ, அதுவே தங்கள் நிலைமையின்பலவீனத்தைக்காட்டும் அறிகுறி என்பதை, ஆரஅமர இருந்துயோசிக்கும்போது காங்கிரஸ் ஆட்சியாளர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறோம்.

குறிப்பேடு எடுத்துக்கணக்குப்பார்த்தால் தெரியும்.

வேலை நிறுத்தத்தை நடத்தியவர்கள் யார்? முதலமைச்சரின் வாக்குமூலப்படியும்அவருடைய கூட்டுத்தோழர்கள் உரையின்படியும்;நாடாளாதநம்பியார்,'சுக ஜீவனம்' இல்லா ஜீவா,முதலாளிகளின் ரகளைகளைத்தாங்கித்தவிக்கும் ராமமூர்த்தி,இப்படிச்சிலர்!

தேசியப் பத்திரிகைகளின் மொழியிலே கூறவேண்டுமானால், 'தோழர்கள்'—அதுகேலிச் சொல்லாம்!

இவர்கள், தேசோத்தாரகர்கள்—கேசரிகள்—அல்ல.

இவர்களில் பலருடைய உருவப்படத்தைஊரார்பார்த்திருக்க முடியாது, பத்திரிகைகளில்.

புகழ்பரப்பப் பத்திரிகையோ, செல்வாக்குப் பெற்றுத்தரசேவகர்களோ, கிடையாது.

அவர்கள், 'கர்ஜனை' செய்ததாகவோ, அவர்களைக் கண்டு, "ஏகாதிபத்ய சிங்கம்பயப்பட்டதாகவோ" பத்திரிகை அலங்காரப்பூச்சு கிடையாது.

ஊர்பேர் அறியாதவர்கள்—பாமரரின் பாஷையிலே பேசுகிறோம், அவர்கள் 'அன்னக்காவடிகள்.' அவர்கள் நடத்தினர் வேலை நிறுத்தத்தை!

ஆகஸ்ட்டு புரட்சித்தலைவிஅருணாஅசப் அலி, ஆந்திரகேசரி பிரகாசம், ஆந்திரப்புலி பட்டாபி, சமதர்மச்சிங்கம்ஜெயப்பிரகாஸ்நாராயண், தமிழ்நாட்டுத் தலைவர் காமராஜர், சட்டசபையிலுள்ள சகலரும், தினமணி, தினசரி, தேவி மித்திரன்,விகடன்,இந்து, இத்யாதி இத்யாதிகள்! இவ்வளவு 'தலைவர்கள்' — எதிரிடையாக!

இன்னம் என்ன வேண்டும் விளக்க!

### போதவில்லை

இதுமட்டும் போதவில்லையே! "செல்வாக்கற்ற"— 'தொழிலாளரைக்கெடுக்கிற' — 'ரஷியாவிடம் மனதை அடகுவைத்த'சிலர் வேலை நிறுத்தத்தைத் தூண்டினர் என்று, 'நாட்டுத்தலைவர்கள்,' 'ஆட்சிப்பீடத்து அமர்ந்தவர்கள்' — 'தீரர்கள்,' 'தியாகிகள்,'கூறி,வேலைநிறுத்தம்செய்ய வேண்டாம் என்று உபதேசம் செய்தனர்.

உண்மையிலே, செல்வாக்கற்றவர்களாக, அந்தச் 'சாமான்யர்கள்' இருந்திருந்தால் என்ன நடைபெற்றிருக்கவேண்டும்? ஸ்பெஷல் போலீஸ் தேவைப்பட்டிருக்குமா! ஏறக்குறைய ஆயிரம்பேர் சிறையில் போட வேண்டிய நிலைமை பிறக்குமா! தடியடியும்துப்பாக்கிப்பிரயோகமும், நிலாச்சோறு போலாகி இருக்குமா!

தலைவர்கள் தாக்கீது வந்த அன்றே தலையங்கம் தீட்டித் தமது மகத்தானமதியைத் தேசியத்தாட்களின் பேனா வீரர்கள் வெளிப்படுத்திய உடனே, போலீஸ் தேவைப் படாமல், வேலை நிறுத்தம் புகைந்துபோயிருக்கவேண்டாமா!

"ஒப்பற்றதலைவர்கள்" மகத்தான புத்திமதியை,' ஒய்வின்றிச்' சொல்லிவந்தார்கள்—வேலை நிறுத்தமோ ஒரு மாதகாலம் நடைபெற்றுவந்தது,ஓராயிரத்து ஐந்நூறுமைல் உள்ள இருப்புப் பாதையை, இரும்புக்குல்லாய் தரித்த போலீசார் காவல்புரிந்தனர், இன்று இத்தனைபேர்கைது இன்று இந்த இடத்தில் தடியடி என்ற அறிக்கைகள் வெளிவந்தவண்ணம் இருந்தன! இதன் பொருள் என்ன?



உறையூர்

**எஸ். எம். எஸ். ஆர். பி.**

சொந்தக்கைத்தறி கலர் புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-செ. நூலில் தயார்செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

"தலைவர்களின்" தாக்கீதுகள் தள்ளப்பட்டுவிட்டனதேவையில்லாததால்,நியாயமல்லவாகையால், தங்கள் உரிமையைப் பாழ்படுத்தும்முறையில் இருந்ததால்.

யாரை "அன்னக்காவடிகள்" என்று ஆளவந்தவர்கள் கேலி பேசினரோ, அந்தஉழைப்பாளிகள் சொல்கேட்டு, உயிரைப் பணயமாகவைத்து உரிமைக்காகப்போராடினர் ஒரு ஆயிரம், இரண்டாயிரமல்ல,ஏறக்குறைய நாற்பது ஆயிரம் மக்கள், ஒருநாள் இரண்டுநாளல்ல, ஒருமாதகால அளவுக்கு.

இதுமுதல் தோல்வி—எவ்வளவு மூடி மூடி வைத்தாலும், மறைக்கமுடியாத தோல்விஎன்பதை முதலமைச்சரும் அவர் தம்குழாமும், உணரவேண்டும். அவர்கள் உணராவிட்டாலும், ஊரார்உணரட்டும்! அதுபோதும் அதுதான் தேவை.

தலைவர்கள்தாக்கீதுடன்நின்றுவிடவில்லை. ஊரெங்கும் காங்கிரசார் பிரச்சாரம் செய்தனர், வேலைநிறுத்தம் கூடாது என்று. கண்டபலன்? தோல்வி!

பத்திரிகைகள்முழுமூச்சாகக் கண்டித்தன—பலன்? தோல்வி!

மற்றவர்களைப்போலநாங்கள் மக்களின் கிளர்ச்சியை அடக்கப்போலீசை—அதிலும் மலபார் போலீசை அழைக்கமாட்டோம்—மக்களை நாங்கள் நன்கு அறிவோம்—அவர்களிடம் இதமாக விஷயத்தை விளக்குவோம்—அடக்குமுறையை அனுஷ்டிக்க மாட்டோம் — இது பதவிபுகுமுன் இருந்த படலம். வேலை நிறுத்தம் மும்முரமானதும், நடந்ததுஎன்ன? 'தலைவர்கள்' தங்கள் முன்னாள் பேச்சின்படி, நடக்கமுடியவில்லை. போலீஸ் தேவைப்பட்டது. தோல்வி தானே!!

போலீஸ்வந்ததோடு முடியவில்லை. நீடித்தது; தோல்வி தானே!

பொது உடைமைக்காரர்களின் தொல்லையே இவ்வளவுக்கும் காரணம். பிடி அவர்களை என்றனர்.பேசிப்பேசிக்களைத்து ஓடிஓடி அலுத்துப்போன அந்தத் தோழர்கள் சிறையில்ஓய்வுபெற்றனரேயொழிய, வேலைநிறுத்தம் ஓயவில்லை. தோல்வி அல்லவா?

இரவில் ரயில் இல்லை! தோல்வி தானே!

இவ்வளவு 'தோல்விகளை' "அன்னக்காவடிகள்" நடத்திய கிளர்ச்சியை அடக்க, இரட்டைக்குழல் துப்பாக்கி சகிதம் கிளம்பிய பெரிய கட்சியின் பெரியதலைவர்கள், பெற்றனர்,—மக்களைத் தயார்படுத்துகிறார்கள் இப்போது, தோல்வி தொழிலாளர்களுக்கென்று, பிரச்சாரம் செய்கிறார்கள்.

தோற்றனர் தொழிலாளர்கள் என்றே வைத்துக்கொள்வோம்.களிப்புக்கு இடமா! பாடுபடுபவன் தோற்றான்—இது பால்பாயாசமா! பருகு இனிக்குமா!

### பலிக்காது

கம்யூனிஸ்டு கட்சியினர், இனி "வாலைமடக்கி வைத்துக்கொள்வார்களாக" என்று தீட்டுகிறது ஒரு ஏடு! அவ்வளவு "ஜார் பித்தம்" ஏறிவிட்டது.

"தேசபக்தர்களின்" இரட்டைக்குழல் துப்பாக்கி கம்யூனிஸ்டு கட்சியைக்கொன்றுவிடுகிறது என்றே வைத்துக்கொள்வோம், ஜாரின் கல்லறையே கேலிசெய்யும் அந்தப்பேச்சைக்கேட்டால் — வாதத்துக்கு அப்படியே கொள்வோம், அதன் பயன் என்னவாகும்? தொழிலாளர் பிரச்னையே தீர்ந்துவிடுமா? கிளர்ச்சிகள் முளைக்காமலே போய்விடுமா? வேலை நிறுத்தம் என்றபேச்சேவாராதே! அப்படி அந்தத்தலைவர்கள் எண்ணினால், அவர்கள்பால், நாம் பரிதாபப்படத்தான்வேண்டும்.

காங்கிரசிலேயே சிலர் தொழிலாளர் இயக்கத்தை நடத்தவேண்டும்.

கம்யூனிஸ்டுகளுக்குத் தொழிலாளர்களிடையே இருந்து வரும் செல்வாக்கை ஒழித்தாகவேண்டும்.

இந்த இரு திட்டங்கள், இன்று காங்கிரசுக்காம்.

இவைஒன்றுக்கொன்றுபொருந்தா என்பதை மறந்து பேசுகின்றனர், அன்பர்கள்.

கம்யூனிஸ்டுகளை ஒழித்து, தேசியத்தினசரிகூறுவதுபோல, அவர்களை எல்லாம் ரஷியாவுக்கு அனுப்பிவிட்டு, அப்பா! அந்தத்தொல்லை ஒழிந்தது என்று ஆயாசம் தீர்ந்து அமருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். என்ன நடக்கும் பிறகு?

(6-ம் பக்கம் பார்க்க)

## இரட்டைக்குழல்

5-ம் பக்கத் தொடர்ச்சி

கம்யூனிஸ்டுகளை விரட்டிவிட்டு, தொழிற்சங்கங்களை நடத்தக்கிளம்புகிறார்களல்லவா, காங்கிரசிலேயேஒரு பிரிவினர், அவர்கள் சர்க்கசில் கம்பிமீதுநடக்கும் வித்தைக்காரர் நிலை பெறுவர்கொஞ்சகாலத்துக்குள்.

தொழிலாளர் ஸ்தாபனத்தைத் திறம்படநடத்தி, தொழிலாளரின் அன்புக்குப் பாத்திராரகவேண்டுமானால், அவர்களின் குறைகளை நீக்கியாகவேண்டும் — அந்தக்குறைகளை ஆராயும் எவரும், அவைகளை நீக்கவேண்டுமென்று பாடுபட முயற்சிக்கும் எவரும், அவர்களுக்காகவாதாட முன்வருபவர் யாரும், அவர்விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தெரிந்தோதெரியாமலோகம்யூனிஸ்டு ஆகித்தீரவேண்டும் — இல்லையேல் தொழிலாளர்களின் தோழமையை இழந்துதீரவேண்டி நேரிடும்.

போலிச்சங்கங்களை வைத்துக்கொண்டு, முதலாளிக்கு நண்பனாக இருந்துகொண்டு, தன்சுயநலச்சொக்கட்டான் ஆட்டத்துக்குத் தொழிலாளர்களைப் "பாய்ச்சிகை" யாக்கிக்கொள்ளலாம்என்ற முறையில்சிலர். கிளம்புகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம் கொஞ்சநாளே அந்தக்கூத்து நடைபெறும். பிறகு கொட்டகை காலியாகும்.

பசி, பிறகு தொழிலாளியைக் கிளர்ச்சி செய்யச்சொல்லும். குறைகள், கொட்டும். வறுமைவாட்டும்; முதலாளித்வம் அவன் முதுகுத்தோல்மீதுமட்டுமல்ல, வயற்றில் அடிக்கும். முறையிடுவான், போலியிடம் பரிகாரம் கிடைக்காது, மீண்டும் ஓர்முறை முறையிடுவான்—அப்போது அந்தப்போலித்தலைவனுக்குக் கூடச்சங்கடமான நிலை பிறக்கும்.

ஏதேனும் செய்தாக வேண்டும், தொழிலாளர் தலைவனாக இருப்பதற்காகவாவது. ஓடுவான் முதலாளியிடம் — அங்குபோய் மண்டியிடுவான். முதலாளித்வம், கேட்கும், "என்ன தம்பி! உன்னை அங்கே வைத்தநோக்கம் என்ன! நீயுமா தொல்லைகொடுக்க வந்துவிட்டாய்! கம்யூனிஸ்டுதான் தொல்லையாகஇருந்தவன் என்று எண்ணினேன். நீயும் அதேவேலை செய்கிறாயே" என்பான். "என்ன செய்வது? கிளர்ச்சியாக இருக்கிறது" என்று போலி, பேசவேண்டும்.

"அடக்கு" என்று கட்டளைபிறப்பிப்பான் முதலாளி.

"முடியாது" என்பான் போலி; முதலில் அழுகுரலில், பிறகு பயத்துடன், பிறகு துணிவுடன், கடைசியில் கம்யூனிஸ்டு குரலில் பேசுவான்!

### பழையகணக்கு

காங்கிரசார், பரீட்சித்துப் பார்க்கட்டும்—அவர்கள்இப்போதுபோடும் திட்டம், நிச்சயமாகத்தோல்வியுறும், கஷ்டம் இருக்குமிடத்திலே கம்யூனிஸ்டு கிளம்பத்தீருவான் — பரமசாதுவான காங்கிரஸ்காரரும், கம்யூனிஸ்டு ஆகித்தான் தீருவார், ஆகவே கம்யூனிஸ்டு கட்சியை ஒழிப்பது என்ற திட்டம் மேலும் பலரைக் கம்யூனிஸ்டு ஆக்கிவைக்கவே பயன்படும்.


பரீட்சிப்பானேன், பழையகுறிப்பேட்டையேகூடப் பார்க்கலாமே. இன்று கம்யூனிஸ்டுக்கட்சியில் உள்ளவர்களில்பெரும்பாலானவர்கள்யார்? தோழர் ஜீவாவைப்போன்ற, சுயமரியாதைச் சமதர்மப்பயிற்சிபெற்ற ஒரு சிலர் தவிர, மற்றவர்களெல்லாம், காங்கிரஸ்காரர்கள், காங்கிரசின்மகத்துவத்தைப் பாட்டாளி உலகுக்கு எடுத்துக்கூறி வந்தவர்கள், காங்கிரசின், சார்பிலே, நின்று, பாட்டாளிகளின் பலத்தை ஏகாதிபத்யத்துக்கு எதிர்ப்புச்சக்தி யாக்கியவர்கள், காங்கிரசின் சார்பில் தொழிலாளர் இயக்கத்தை நடத்திவந்தவர்களே தவிர, வேறு அல்லவே.

காங்கிரசாக இருந்து, காங்கிரசில் இருந்துகொண்டே ஏழைஎளியோருக்காகப்பரிந்து பேசுபவராகி, காங்கிரசின் ஆசிபெற்று தொழிலாளர் இயக்கத்தை நடத்தி, காங்கிரஸ் சமதர்மியாகி, சமதர்மமும் காங்கிரஸ் முதலாளிகளின் போக்கும் மோதியதால்; கம்யூனிஸ்டு ஆனவர்களே யாகும்.

இனியும்தொழிலாளர்களின்இடையேபோய் வேலைசெய்வதற்காகத் தயாரிக்கப்படும் நண்பர்களும்,—அதாவது இன்று கம்யூனிஸ்டு கட்சியை ஒழிக்கும் கைங்கரியத்தைச் செய்யக் கிளம்பி —அவர்கள் காலிசெய்யும் இடத்திலே தாங்கள் அமரவேண்டும் என்று புறப்படுகிறவர்களும், அதே பாதையில் தான்சென்றாகவேண்டும்—வேறுமார்க்கம் இல்லை—எனவேதான் கூறுகிறோம், கம்யூனிஸ்டு ஒழிப்பு வேலைகைகூடாது, நடைமுறைக்கு ஏற்றதல்ல, அதற்காகயாரைஅனுப்பினாலும், அவர்களே சின்னாட்களிலே கம்யூனிஸ்டு ஆகிவிடுவார், அதுஅவ்வளவு எளிதில் மனதை மயக்கும் மகத்தான தத்துவம்!

### பாராட்டுகிறோம்

தொல்லைக்கு ஆளான தொழிலாளத்தோழர்களையும், அவர்களுக்காகப் பாடுபட்டுக் கஷ்டநஷ்ட மடைந்த பொது உடைமைக் கட்சியினரையும் பாராட்டுகிறோம்; திராவிடர்கழகம், அதிகமான அளவிலும், உருவான முறையிலும், உதவிசெய்ய முடியாமற்போனதற்காக வருந்துவதுடன், எமது உள்ளம், உமது நிலைகண்டு, கொதித்தது—கொதிக்கிறது —என்பதைக் கூறிக்கொண்டு, தளராமல், உழைத்தால், தலைநிமிர்ந்துவாழலாம், என்ற பொது நீதியின்படி, நிச்சயமாகநாம் வெல்வோம், என்று உறுதி கூறி, வணக்கம் தெரிவிக்கிறோம். வாழ்க தொழிலாளர்கள்! வளர்க அவர்கள் சக்தி! வெல்க சமதர்மம்!

ஜெயராம் காயசுத்தி லேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம் துடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும்.

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0. வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,

28, காசிவிஸ்வாநதர் கீழ்வீதி, கும்பகோணம்.


## பிரசாதம்!

"மகாஜனங்களே! மகாபுத்திவான்களும், வியவகார ஞானஸ்தர்களுமான உங்கட்கு நான் என்ன விசேஷமாகக் கூற இருக்கிறது. காலம் ரொம்பக் கஷ்டம்! உணவுப்பொருள் விஷயமாக ரொம்பத்திண்டாட்டம்! என்ன செய்வது. மலைபோன்ற கஷ்டம் வந்தாலும், மனம்கலங்காத மனோதிடம் கொண்ட மகானுபாவர்களல்லவா தாங்கள்! ஆகவே, இப்போதையஉணவுக்கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள். அரிசி கிடைக்காதவர்கள், கோதுமைசாப்பிடுங்கள்; அதுவும் கிடைக்காதவர்கள், சோளம் சாப்பிடுங்கள். பிரயத்தனம் செய்துபார்த்தும் பிரமாதமான பலன் இல்லையே! மகாஜனங்களே! இப்போது உங்களுக்குத் தரப்படுகிறதே அரிசி அந்த அளவும், இனிக்குறைக்கப்படும். பொறுத்தருள்க!"

இந்தியாவிலேசுதந்திரம் உதயமாகிவிட்டது—இடைக்காலசர்க்கார் ஏற்பாடாகிவிட்டது — இனி இன்பம். துன்பம் இல்லை, என்று பேசினஅன்பர்கள்பலர்.

பாமரன், பாழும்உணவுப் பிரச்னை தீர்ந்து, பசியாற முடியும் என்று எண்ணினான்.

உணவுமந்திரி தோழர் ராஜேந்திர பிரசாத் செப்டம்பர் 23-ந்தேதி, ரேடியோ சொற்பொழிவுமூலம்,

கஷ்டத்தைத் தாங்கிக்கொள்ளுங்கள்
அந்த வித்தையிலே தான்நீங்கள்கைதேறினவர்களாயிற்றே

என்று தட்டிக்கொடுத்துவிட்டு,

அரிசியின் அளவும் குறைக்கப்படும்

என்று கூறிவிட்டார். கிடைத்த "பிரசாதம்" இது!

முதலமைச்சர் பிரகாசம், உணவுமந்திரியைக்கண்டுபேசி சென்னை உணவு நெருக்கடியைத் தீர்க்க வழி தேடச் சென்றார் — செல்லுமுன், டாக்டர் ராஜேந்திர பிரசாத், ரேடியோமூலம் இந்தப் 'பிரசாதம்' அளித்தார்.

காந்தியாரைக்கண்டு பேசினால் காரியம் கைகூடுமென்று கருதிக்கொண்டு அவரையும் கண்டார் முதலமைச்சர். அங்கு கிடைத்த பிரசாதம் அதைவிட அற்புதமாகஇருந்தது.

"ராஜேந்திர பிரசாதைத்தொந்தரவு கொடுக்க வேண்டாமென்று நான், பிரகாசத்தைக் கேட்டுக்கொண்டேன், அவரும் அதற்குச்சம்மதித்தார்" என்று கூறுகிறார் காந்தியார்,

தொந்தரவு தரக்கூடாது என்று கூறினதோடு விட்டாரா? இல்லை. உணவு நெருக்கடிபற்றியும் பேசினார். என்ன சொன்னார்?

"தென்னாட்டு மக்களை எனக்கு நன்றாகத்தெரியுமே! தென்ஆப்பிரிக்காவிலே எனக்கு அவர்களின் பழக்கம் ஏற்பட்டதிலிருந்து தெரியும். அவர்கள் புத்திசாலிகள்" என்று கூறினார்.

பிரகாசம்கேட்கட்போனது'சோறு' —கிடைத்தது "புகழ்." போகட்டும், நம்நாட்டாருக்கு ஒரு மகாத்மாவின் வாயால் புத்திசாலி என்ற பட்டம் கிடைத்ததல்லவா? சந்தோஷந்தான் என்று திருப்தியும் அடையலாம். ஆனால், மேலும் சிலபேசிஇருக்கிறார் காந்தியார். அது என்ன?

"தென்னாட்டார் புல்லுக்கு இடையே கிடைக்கும்கீரையைக் கூடச்சைவ உணவாகச் செய்து கொள்வார்கள். தென்னை, வாழை, மாவள்ளிக்கிழங்கு, மிளகாய் முதலியன அங்கு உற்பத்தியாகின்றன. இன்னும் என்னவேண்டும்? புத்திசாலிகளான தென்னிந்திய மக்கள் அரிசி இல்லாமலேயே காலந்தள்ளமுடியும்" என்றுகூறிவிட்டார்.

"அரிசி இல்லை—அளவும் குறைக்கப்படும்" என்கிறார் ராஜேந்திர பிரசாத்.

ராஜேந்திரபிரசாதிடம் போய் அரிசி கேட்கிறார் பிரகாசம்.

ராஜேந்திரபிரசாதைத் தொந்தரவு கொடுக்கவேண்டாமென்று காந்தியார் பிரகாசத்துக்குக் கூறுகிறார். கூறவேதோடு, புத்திசாலிகளானதென்னிந்தியர்கள், கீரை கிழங்கு தின்று வாழலாமே, அரிசிகூடத்தேவை இல்லையே என்று கூறுகிறார்.

தேசியசர்க்கார் வரவேண்டும், வரவேண்டும் என்று பசிகொண்டு இருந்தார்களே, அன்பர்கள், இந்தப்பிரசாதம் கிடைத்திருக்கிறதே, பசி அடங்கிவிட்டதாஎன்று கேட்கிறோம்




கிளி மார்க் பட்டணம் பொடி.

நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

எ. எஸ். ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.
பழையவண்ணாரப்பேட்டை, சென்னை.


### திருமணம்

மதுரையில் 8—9—46 ஞாயிறன்று மத்திய திராவிடகழக உறுப்பினரும். மதுரை திராவிடகழகத்துணைத்தலைவருமான தோழர் சுக்குனி அவர்களின் புதல்வி தோழியர் விசயரத்தினத்துக்கும் அருப்புக்கோட்டை நமதியக்கத்தோழர் வெங்கடாசலபதி, பி. ஏ. க்கும் பதிவுத் திருமணம் விருதைத் தோழர். எம். எஸ். பி. செந்திக்குமார் தலைமையில் நடந்தேறியது.

## இன்பத்திராவிடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியார் இராமசாமி 5544ம் நம்பர் 'கைதி'யானார், சென்னைச்சிறை புகுந்தார். வெளியே தமிழர் தம் தலைவனுக்காக உருகினர், சிறையோ புதிய 'கௌரவம்' பெற்றது; 'செந்தமிழ் நாட்டுச் சிங்கம்—எங்கள் ஈ. வெ. ராத்தங்கம்,—வந்தார்—வந்தார்' என்று சிறையிலே கீதம் கிளம்பிற்று. ஆம்! சிறைக்கு வெளியேமட்டுமா, உள்ளேயும் இருந்தது, பெரியார் பெரும்படை!

வழக்கு மன்றத்திலே, அவர் ஆற்றிய வீரஉரை, அவர் வாழ்க்கையின் திறவுகோல் எதுவென்பதைக்காட்டுவதாகும்.

லட்சியத்தை அடைய கஷ்டநஷ்டம் அடைதல் எனும் விலை கொடுத்தாகவேண்டும்—என்றார். ஆம்! கொடுத்திருக்கிறார். எட்டுமுறை சிறை சென்றதுமட்டும் அல்ல, விலை.

எந்தமக்களின் சார்பாகப்பேசுகிறாரோ, எந்தத்தமிழ் இனத்துக்காகத்தளராது உழைக்கிறாரோ, அதே இனமக்களின், கேலி கண்டனம் சந்தேகப்பார்வை இழிமொழி இவைகளைப்பல்லாண்டுகளாகப்பெற்று இருக்கிறார்—ஆனால் பாதையிலிருந்து வழுவியதில்லை!

விலை கொடுத்தார் ஓர்சிறந்த இலட்சியத்துக்காக. என்ன அந்த இலட்சியம்? அதனைத்தமிழர் அறிதல்வேண்டும், அவருடைய விழா கொண்டாடப்படும் இந்நாள். அவரே பேசுகிறார், கேளுங்கள், அவருடைய இலட்சியம் என்னவென்று தெரியும்—அது உங்கள் இலட்சியம் என்பதை உணருவீர்கள்.

★

"திராவிடர்களின், தமிழர்களின்நிலைமையைத்தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள், முதலாவது திராவிடநாடு தனி நாடு என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

திராவிடநாட்டின் எல்லைகளைக்குறிப்பது கஷ்டமில்லை. இயற்கை திராவிட நாட்டைச் சுற்றி மூன்றுபக்கங்களில் சமுத்திரத்தையும் ஒருபுறம் விந்தியமலையையும் அமைத்துவைத்திருக்கிறது.

திராவிடநாடு, தெளிவாக ஒரு தனிப்பட்ட சமூகத்தையுடையது, திராவிட மொழியான தமிழ்மொழி எத்தனை பிரிவாய்ப்பிரிந்திருந்தும், ஆரியரோடு சம்பந்தப்படாமல் ஒருதனிப்பட்ட இனமாக இருப்பதற்குத் தமிழ்மொழியின் தன்மைக்கு நான் வந்தனம் செலுத்துகிறேன்.

திராவிடநாடு தன்னுடைய சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மறுப்பதே தொன்று தொட்டு வடநாட்டிற்கும் திராவிடநாட்டிற்கும் நடந்த சண்டைக்குக்காரணம்.

சூதாட்டத்தில் காய்களை உருட்டுவதுபோல் சிலமனிதர்களை உருட்டிவிட்டு திராவிட நாட்டுப் பிரிவினையை அடையமுடியாது. திராவிட இனத்திலுள்ள ஒவ்வொருவனும் விடுதலை பெறவேண்டுமென்று முழுமனதுடன் தீர்மானித்தாலே திராவிடநாடு இலகுவில் பெறமுடியும்.

"ஒருவனுடைய நாட்டில் வேறுஒருவன் வந்து ஆதிக்கம் செய்யும் படியாகவும் நாட்டுக்குடையவனைச் சூத்திரனாகவும் கீழ் ஜாதியாகவும் செய்திருக்கும், செய்துவரும் ஆட்சி, எப்படிப்பட்டதானாலும் அது கொடுங்கோன்மை ஆட்சியேயாகும்.

இன்று நமக்குத் திராவிடர் என்கின்றபெயரே இல்லை. தமிழர் என்கிற பெயரே இல்லை. சூத்திரர், தீண்டப்படாதவர், நாலாம் ஜாதி, ஐந்தாம் ஜாதி என்கிற பெயர்கள் தான் இருக்கின்றன. இது சரியா? இது உங்களுக்குச் சம்மதமா? இதுமாற்றப்படவேண்டாமா? அதற்கானவை செய்யவேண்டாமா?

இதைச் செய்வதை விடவா, மந்திரிப்பதவி, வைசிராய் மெம்பர்பதவி, ஆலோசனையாளர் பதவி, கவர்னர் பதவி ஆகியவைகள் பெரிதும் அவசரமும் அவசியமுமானவை என்று கேட்கிறேன்.

முதலில் சமுதாயத்தில் பிறவியின் பேரால்உள்ள பேதங்களை ஒழித்தாக வேண்டும். அதுவே, இந்நாட்டு சமதர்மத்திற்குமுதல் படியாகும். அதனாலேயே, பொருளாதாரசமதர்மமே மனிதசமூக சாந்திக்கு மருந்து என்று கருதியிருக்கும் நான் சமுதாயத்தில், வாழ்க்கையில், சமதர்மத்தை முக்கியமாய் வலியுறுத்தி வருகிறேன்.

நம்நாட்டில் இன்று ஜாதிபேதங்கள் ஒழிந்துமக்கள் யாவரும் பிறவியில் சமம் என்கின்றதான்சமதர்ம முயர்ச்சியே முதலில் செய்யவேண்டியதாய் இருக்கிறது.

சமூகத்தில் மேல்ஜாதி கீழ்ஜாதி அடிமைஜாதி என்பவைகள் இருப்பதோடு, ஆண்பெண் தன்மைகளில் உயர்வு தாழ்வு இருந்து வருகிறது, இவைதவிர ஏழை பணக்காரன், முதலாளி, தொழிலாளி, தன்மையும் இருந்து வருகிறது. இவற்றுள், சில இயற்கையாக ஏற்பட்டதாகவும் சில முயற்சியால் செயற்கையால் ஏற்பட்டதாகவும், இவ்வளவுக்கும் காரணம் மனிதன் அல்லவென்றும் சொல்லப்படுகிறது. இவற்றையே மேல் நிலையில்உள்ளவனும், கீழ்நிலையில் உள்ளவனும், நம்பிக்கொண்டிருக்கிறான். இந்த மூடநம்பிக்கைதான் வெகுகாலமாக மனித சமூகத்தில் எவ்வித மாறுதல்களும் ஏற்படுவதற்கில்லாமல் தடுத்துக்கொண்டுவருகிறது.

இந்தமாபெரும் சனியனான ஜாதிமத பேதத்தொல்லைகள் மனிதசமூகத்தை விட்டுத் தொலையவேண்டுமானால் மனிதனுக்கு விஞ்ஞான அறிவும் நாட்டில் விஞ்ஞான வளர்ச்சியும் தேவை.

கஷ்டமானதும் இழிவானதும் ஆனவேலைசெய்பவர்கள் எல்லாம் கீழ்ஜாதியாகவும், சுகமாகவும் மேன்மையாகவும் உள்ள வேலைசெய்பவர்கள் மேல் ஜாதியாகவும், ஒருவேலையும் செய்யாமல் ஊரார் உழைப்பில் வயிறு வளர்த்துக் கொண்டுமக்களை ஏமாற்றிக் கொண்டுவஞ்சித்துத் திரிகிறவர்கள் மகாமகா மேல்ஜாதியாகவும் ஏற்பட்டதற்குக்காரணம் விஞ்ஞான அறிவில்லாததே.

மேனாட்டிலே இம்மாதிரியான தொல்லை அனேகமாகத் தீர்ந்துவிட்டது.

விஞ்ஞானவளர்ச்சி காரணமாக சமத்துவம் அந்தச்சமூகத்திலே உண்டாக மார்க்கம் ஏற்பட்டுவிட்டது. நாம் என்னகூறினாலும் இனிமேல்நமது பின்சந்ததியார் பழைய தொழில்முறை, ஜாதிமுறைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது உறுதி.

"எனக்குத் தொழிலாளர்களிடம் உண்மையில் அன்பும் பக்தியும் கவலையும் வேறெதையும் விட அதிகம் என்பதை உண்மைத் தொழிலாளர்கள் 15,16 வருடமாகத் தொழிலாளருடன் பழகுபவர் அறிவர்.

காதினிக்கப் பேசுபவர்களைக்கண்டு தொழிலாளர் மயங்குவது அறிந்து பெரிதும் வருந்தினேன். 15 ஆண்டுகட்கு முன்பு நாகையில், ரயில்வே வேலைநிறுத்தம் நடந்தபோது அதிலே கலந்து கொண்டு பாடுபட்டு, அதற்காக நான் சிறைசென்றதை அக்காலத்தலைவர்கள் உணர்வார்கள்.

தொழிலாளர்களின் விடுதலையே தமிழர்களின் விடுதலை—பார்ப்பனரல்லாதாரின் விடுதலையாகும்.

ஒருகாலத்தில் இங்கிலாந்தில் அன்னிய நாட்டுத்துணிகட்டினால் 30 பவுன் அபராதம் விதிக்கச்சட்டம் இயற்றினார்களாம். அவர்களுடைய நெசவுத் தொழிலை விருத்திசெய்ய இச்சட்டத்தை ஏற்படுத்தி இருந்தனர் இன்று நம்மில் 100-க்கு 60, 70-பேர் ஆமதாபாத், போன்ற வெளிமாகாணத் துணிகளை அணிந்திருப்பதைப் பார்க்கிறோம். பெண்களும் ஆமதாபாத் சேலைகளைக்கட்டுகிறார்கள்.


ஆமதாபாத் முதலியவெளிநாட்டு, அதாவது திராவிடநாடு அல்லாத நாட்டுத் துணிகளைநாம் தடுத்துவிட்டால் நமது கைத்தொழில் வளர்ச்சி அடையும். கைத்தறி நெசவாளர்களின் துன்பம், வறுமை, கஷ்டம் ஒழிந்து போய்விடும்.

எந்த மனிதனும் மற்றொரு மனிதனுக்கு உபகாரியாகவும் கடைசிபட்சம், தன்னால் மற்றவனுக்குத்துன்பம் தராதவனாகவும் இருப்பதே பெரிய ஒழுக்கம், மதம் என்று சுயமரியாதை இயக்கத்தார் கருதி இருக்கிறார்கள். இந்தச்சமயத்தில் ஒழுக்கத்தைப் பற்றி ருஷ்யபுரட்சி வீரர் லெனின் பொது உடைமைச் சிறுவர்கள் கூட்டத்தில் பேசிய பேச்சை உங்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

அதாவது, "பொது உடைமைக்காரர்களுக்கு ஒழுக்கம் இல்லை என்று நம்எதிரிகள் சொல்கிறார்கள். அது தவறு. நாம் தான்சமூகத்தின் உண்மையான ஒழுக்கங்களைக்கையாள்வதோடு மற்றவர்களையும் ஒழுக்கமாக நடவுங்கள் என்று கட்டாயப்படுத்துகிறோம். அதற்குப் பொதுஉடைமை ஒழுக்கம் என்று பெயர். நம்முடைய ஒழுக்கத்திற்கும், மதவாதிகள், பணக்காரர்கள், ஒழுக்கத்திற்கும் வித்யாசமுண்டு. அவர்களது ஒழுக்கங்கள் ஏழைமக்களுடையவும் பாமரமக்களுடையவும் கண்களில் மண்ணைப்போட்டு பலன் அனுபவிப்பதற்கு ஆக ஏமாற்றச் செய்கிற சூழ்ச்சிகளேயாகும். நமது ஒழுக்கமெல்லாம் ஒருவனால் ஒருவன் ஏமாற்றப்படாமலும், ஒருவனலொருவன் வருத்தப்படாமலும் இருக்கும்படியானவைகளாகும். பாட்டாளி, ஏழைமக்களுடைய நன்மையையே பிரதானமாகக் கருதுவது தான் நமது ஒழுக்கம்" என்று லெனின் சொன்னார். சுயமரியாதைக் காரர்களாகிய நாமும் தனிப்பட்ட எந்தவகுப்பாருடையவும் சுயநலத்துக்கு மாத்திரம் பயன்படும் எந்த ஒழுக்கத்தையும் தனிப்பட்ட மதவாதிகளுக்கு மட்டும் பயன்படும் எந்த ஒழுக்கத்தையும் ஒப்புக்கொள்ளாமல், எல்லாமக்களுக்கும் எந்த வகுப்பாரானாலும் எந்த நிலையிலுள்ளவர்களானாலும், எந்த மதக்காரரானாலும் யாவருக்கும் ஒன்றுபோல் பயன்படும்படியான காரியங்களையே நாம் ஒழுக்கம் என்கிறோம். இதனால் சுயநலத்தையேபிரதானமாய்க் கருதிக் கற்பித்துக்கொண்ட ஒழுக்கங்களை உடைத்தெறிவது சுயமரியாதைக் காரர்கள் கடமையென்பது விளங்கும்.

வயது சென்ற பெரியார்கள், மானமற்ற செல்வப்பித்தர்கள், பதவிப்பித்தர்கள் நிலைஎப்படியோ இருக்கட்டும். வாலிபர்களாகிய

2-ம் பக்கம் பார்க்க



# வெற்றி விழா

★

முப்பது ஆண்டுகளுக்குமேலாகப் பொதுமக்கட்கு,—பரிதாபத்துக்குரியவர்கட்காகப் பேசித்தமிழரைத்தட்டிஎழுப்பத் தளராது உழைத்து, தாடிமுளைக்காதகாலத்திலே துவக்கிய அந்த அரும்பணியைத்தாடி வெளுத்துக்காட்சி தரும் இன்றுவரை அயராமல் ஆற்றிவரும் அஞ்சா நெஞ்சினர்.

எங்கும் எதிர்ப்பு! எத்திக்கிலிருந்தும் ஏசல்! மேடை ஏறினால் ஜோடிக்காலிகள் கூட்டத்தள் தூக்கிவிடப்படும் துடுக்கர்கூட்டம்! கல்லடி! சொல்லடி! இவ்வளவுக்கும் இடையே நின்று எதிர்ப்புகண்டு அஞ்சாது, என் உரிமை என் மனதிற்பட்டதைக் கூறுவது என்று எக்காளமிட்டு வரும் ஒருஇணையில்லாத்தலைவர்.

ரிஷியானாலும் என்ன, தவசியானாலும் என்ன, வழிகாட்டியானாலென்ன வைகுண்டவாசியானாலென்ன, வண்டவாளங்களை வெளியிட்டே தீருவேன், வந்தது வரட்டும், வறண்ட மதியினர் வந்தனம் செலுத்தமாட்டார்கள் என்பதற்காக,வஞ்சகரின் அடிபணிவதா, அதுவா வீரத்தொண்டாற்ற விழைபவரின் கடமை என்று சொல்லித் தியாகத்தீயிலே குதித்துத்தமிழருக்குப் புதுவாழ்வு தந்ததந்தை.

நாடுமுழுவதும், நான்குஜாதிகள் நான்முகன்கட்டளை என்று நம்பி அதிலே திராவிட மக்களாம் நாம், நாலாம் ஜாதி,பார்ப்பனருக்குச் சேவை செய்யத் தோன்றியவர் என்று எண்ணி ஏமாந்திருந்த நேரத்தில், "ஜாதி ஏதப்பா? அது எதனால் செய்து வைத்த சூதப்பா! நான் சொல்வது தப்பா என்று யோசித்துப் பதில் கூறப்பா! என்று முழக்கமிட்டு முறுக்கேற்றித் திராவிட முரசு ஒலித்திடச் செய்த ஒப்பற்ற தலைவர்.

எட்டுமுறை சிறை சென்ற தீரன். தமிழனின்தீரத்தைப்பாடி, ஆச்சாரியார் ஆட்சியைச்சாடி, சிறைச்சாலை சென்றுஅறுபதாம் ஆண்டிலே வெஞ்சிறை புகுந்த வெற்றிவீரன்.வாலிபர்தோழன், வற்றாத பகுத்தறிவின்காவலன்.

இனத்தை அறியாது அதன் இயல்பும் தெரியாது, மதம் எது வென்று உணராது,ஆரியர்மதத்தைக்கொண்டு மக்களை அடிமை கொண்டவிதம் தெரியாமல், நமது மக்கள், நினைப்பு கெட்டு, நிம்மதியற்றுக் கிடந்த நேரத்தில், வெள்ளத்தை எதிர் நீச்சால் கடந்து, வீரப்பணி புரிந்து, நம்மை நாம் உணரவும், நமது இனம் இதுவெனத்தெரியவும், அதன் விடுதலைக்குப்பாடுபடவும், அந்தப்போரிலே பிணமானாலும் சரி கவலையில்லைஎன்ற உறுதியைநாம்பெறவும்உழைத்த உத்தமன்.

மதகுருமார்களும் மடத்து அதிபரும் கோயில் குருக்களும் வக்கீல்ஐயரும் ஆளும் வர்க்கமும் ஐஸ்வரியம் பெற்றோரும் அவரை எதிர்த்தனர். ஆற்றல் அரண் அமைத்துக் கொண்டு அறிவெனும்வாளேந்தி உழைப்பெனும் புரவி ஏறித் தமிழகத்திலே உலவி ஆரியக்காட்டை அச்சம் தயைதாட்சணியமின்றி அழித்தொழிக்கும் பெரியார், தமக்கு எதிரிடையாக அமைக்கப்பட்ட எதிர்ப்பு முன்னணியைக்கண்டு, எஃகு உள்ளம் கொண்ட நமக்கு இந்தஎதிர்ப்பு எம்மாத்திரம் என்றுகூறி, களத்திலே போரிட்டபடி மாண்டாலும் மாள்வேனேயன்றி கனபாடிகளின் காட்டுக்கூச்சலைக் கேட்டு, விட்டுக்கோடி ஓடிய மாட்டேன் என்று வீரமொழி புகன்று இனப்படை அமைத்துத்தந்தார். அவர் காணாதகளம் இல்லை!வெற்றிபெறாதபோரில்லை! வீணரின் உரை அவரை விரட்டியதில்லை!

அவருக்கு இக்கிழமை 68-ம் ஆண்டு.

இந்தக்,கிழமையை விழாவாகக்கொண்டாடும் தோழர்கள், பெரியாரின் பெருந்தொண்டினைப்பற்றிப்பேசிவிட்டுப் பெருமூச்செறிவர்—ஏன்? இலேசாக நமது தோழர்கள் உள்ளத்திலேயேகூட ஒரு சந்தேகம்—கொஞ்சம் சஞ்சலம் உண்டு—அதாவது இந்த உழைப்பு, தக்கதோர் வெற்றியைத் தந்துவிட்டதா, அல்லது சூதினரின்சூழ்ச்சியின் காரணமாக, உழைப்பு வீணாகிவிட்டதா என்ற எண்ணம்.

பத்திரிகைப் பாராட்டுதல், பாமாலை, பூமான்களின் பவுன் மாலை, சர்க்கார் தரும் பட்டம் பதவிமாலை ஆகியவைகளை வெற்றிச்சின்னமெனக் கொள்வதாயின், பெரியார் வெற்றி பெற்றவரல்ல. ஆனால் வாலிப உள்ளங்களின் நன்றிகலந்த அபிஷேகமே வெற்றிக்கான சின்னம் எனில், பெரியார் பெருவெற்றியைநெடு நாட்களுக்கு முன்னதாகவே பெற்றுவிட்டார் என்று திட்டமாகக்கூறலாம்.

சட்டசபைக்கு அழைத்துச் செல்லமாட்டார், பட்டம்வாங்கித்தரமாட்டார், பதவியில் நம்மை உட்கார வைக்கமாட்டார்,'பணம்காசு'தரமாட்டார், ஒரு பாராட்டுரைகூட வழங்கமாட்டார், என்பதை அனுபவ பூர்வமாகத் தெரிந்திருந்தும், ஆயிரமாயிரம் இளைஞர்கள் அவருக்குத்துணை நிற்பது—வேறு எங்கும் காணமுடியாத அற்புதம்—பெரியாரின் பெரு வெற்றி அது. வாலிபர்களை தன் பக்கம் இழுத்துவிடும் ஓர்வகை "அபின்" இருக்கிறது, அந்தக் குறுகுறுப்பான பார்வையிலே, கொச்சை மொழியிலே, பச்சை பட்டவர்த்தனமாக இருப்பதைக்கூறிடும் பேச்சிலே. இந்த "அபின்," எண்ணற்றபத்திரிகைகளின் பிரசார பலத்தையும் விட மேலானது, எத்தனையோ வாலிபர்களை, வாழ்க்கைப் பூந்தோட்டத்திலிருந்து, போர்க்களத்துக்கு இழுத்துவந்துவிட்டது.

பிரகட்சியாளர்கள், குறிக்கோள்மட்டும் கொண்டவர்களல்ல,நடைமுறைக்கான,அன்றாடவேலைத் திட்டமும், உடனடியாகநடத்தியாகவேண்டிய வேலைத்திட்டமும் உடையவர்கள். எனவே அவர்களுக்கு 'இலாபநஷ்டக்கணக்குப்'பார்த்துக்கொள்ள, அதற்குஏற்றபடி திட்டத்தைத்திருத்த, மாற்ற, புதுப்பிக்க வசதி உண்டு. பெரியார் துவக்கி நடத்திவரும் கட்சிக்கு, உடனடிவேலைத் திட்டம் என்று ஒன்றுமில்லை—உழைத்து உழைத்து முறுகேற்றி, அந்த முறுகு ஏறினதன் பலனைப் பிறகு, சமுகமே ஓர் புதிய பயனுள்ள தோற்றம் அளிக்கவேண்டும்—இந்தக்குறிக்கோள்கொண்டவரானதால், அவ்வப்போது 'இலாபநஷ்டக்கணக்கு'பார்க்க முடியாது — வசதிகிடையாது. கதிர்தோன்றும் முன்புவரை, புல்லுக்கும் நெல்லுக்கும் தரப் போகும் பச்சைக்கும், பார்க்கும்போது வித்யாசம் தெரியமுடியாதல்லவா! அதுபோல, கதிர் காணு முன், கணக்குப் பார்க்கமுடியாது. வெறும் பச்சை என்று எண்ணுடுவோர் ஏமாளிகள்—கதிர்முளைக்கவேண்டும், அசற்காகப்பயிரைக் கசக்கிப்பார்க்க வேண்டும் என்று நினைப்பவர், கோமாளிகள். பெரியாரின் உழவுமுறையைமட்டும்தெரிந்து கொண்டால் போதாது, வயலிலே இருப்பது, ஆறுமாதப் பயிரல்ல, ஒரு'தலைமுறைப்பயிர்'—பலதலைமுறைகளாகக் கரம்பாகிக்கிடந்த வயலிலே, உள்ள பயிர். அறுவடைக்குக் காலம் பிடிக்கும்!

இடைக்கால சர்க்கார்?—நாம் இல்லை. சட்டசபை?—தொடர்பு இல்லை. பத்திரிகைபலம்?—தத்துக்குழவிநிலை- அமைப்பு?-முடிச்சேறின கயிற்றின்நிலை, முறுக்கேறின கயிறல்ல. பிரச்சாரம்?—காட்டுவெள்ளத்தின் முறை. கொள்கைகள்?—வேட்டுப் போடும்விதமானவை.

நாம் இவைகளை மறைக்கத் தேவையில்லை — சொல்வதிலே குற்றமுமில்லை—கூச்சமும் வேண்டாம். ஏனெனில், இத்தனை சஞ்சலத்துக்கும், அப்பால், நாம் சந்தோஷப்படும் அளவுக்கு நமக்கு வெற்றி இருக்கிறது.

இவ்வளவுஇடையூறுக்கிடையே நாம்பணியாற்றமுடிந்தது.

இடையூறுகள் ஒழிந்தால்? எண்ணும்போதே, பெருமூச்சு புன்னகைக்கு இடம்தரும்.எண்ணிப்பாருங்கள்!

நாம் மேற்கொண்ட வேலை, "ஆயிரங்காலத்துப் பயிர்" என்பார்களே, அதுபோன்றது; எனவேதான், உடனடியாகக் கண்ணுக்குத் தெரியக்கூடிய, மற்றக்கட்சிக்காரர்கள் காட்டுவதுபோன்ற, 'அன்றாடவெற்றிகள்' நமக்கு இல்லை. ஆனால்,நாம் அடைந்துள்ள வெற்றி, கரம்பைத்திருத்தி வயலாக்கி இருக்கிறோம்—ஆம்! — சூழ்நிலையை மாற்றி இருக்கிறோம் — மனப்போக்கைமாற்றி இருக்கிறோம்—'எதிரிகள்' என்று நாம் தவறாக எண்ணிக்கொண்டிருக்கும்பலர் நமது கொள்கைகளின், வக்கீல்கள்! நீமட்டுந்தானா?நான்என்ன ஆரிய அடிவருடியா? உனக்குத்தானா சீர்திருத்த ஆர்வம்? நாங்களென்ன குளத்தங்கரை குப்பன்களோ! உனக்குத்தானாசுயமரியாதைவேண்டும்! நாங்கள் அதனை விரும்பாதவர்களோ? நீமட்டுந்தானா வடநாட்டின்படையெடுப்பைத்தெரிந்து கொண்டவன்? நாங்கள் அறியமாட்டோமா?—இவைகள் காங்கிரஸ்—கம்யூனிஸ்டு வட்டாரங்களிலே இருந்து கிளம்பும்வார்த்தைகள். வார்த்தைகளை வீசிவிட்டுக் கூடவே இரண்டோர் கற்களையும், தீப்பந்தம், திராவகம், கத்தி முதலியவற்றையும் கூடத்தான் வீசுகிறார்கள்; ஆனால் சூழ்நிலைமாறிவிட்டது, கொள்கைக்கு, அவர்களும் ஒப்புக்கொண்டனர், என்பதைத்தானே இங்கிலை காட்டுகிறது. இது பெரியாரின் பெருவெற்றி. எனவே, நண்பர்கள் ஆயாசப்படவோ, எல்லாம் சரி, ஆனால் எங்கே பலன் என்று கேட்கவோ தேவையில்லை.

அதுவே, பெரியார் வாரவிழா கொண்டாடும் அன்பர்களுக்கு நாம் தரும் செய்தி.

வெற்றி பெற்றாயிற்று. பெரியார் பெருந்தொண்டு பயன்தந்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.